## இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் - 2016

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் அருவச் சொத்துக்களாக இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்பட்ட ரூபா 1,394,400 பெறுமதியான கணக்கீட்டு பொதி மற்றும் காணியைச் சுற்றிலும் மதில் நிர்மாணித்தல் மற்றும் வேலிகளை அமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 9,697,817 தொகைக்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 9,939,324 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 12,737,848 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால், நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 2,798,524 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் பதவியணிக்காக பாடநெறிகளை நடாத்துதல், தொழில்சார் நிறுவனங்களுக்கு அங்கத்துவ கட்டணங்கள் மற்றும் வினைத்திறமைகான் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற பயிற்சிகள் மற்றும் மதிப்பீட்டு செலவினமாக மீளாய்வாண்டினுள் ரூபா 3,696,461 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அவ்வாறு செலவிடப்பட்ட செலவினங்கள் ஆண்டிற்கான வருமானத்திற்கு எதிராக பதிவழிப்பதற்குப் பதிலாக, இயலளவு அபிவிருத்தி செலவினமாக அருவச் சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 104,087,300 முகப்பெறுமதியுடைய திறைசேரி உண்டியல்களுக்குரிய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முதலீட்டுப் பெறுமதி ரூபா 96,125,922 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அது ரூபா 91,129,593 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால், நிதிக்கூற்றுக்களில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 4,996,329 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த உடன்படிக்கைக்குரியதான மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 6,436,074 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,439,745 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமும் ரூபா 4,996,329 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 74,342 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் ஆண்டிற்குரிய வருமானமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக, அது முன்னைய ஆண்டின் சீராக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாறை உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குரிய 2013 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய ரூபா 333,697 பெறுமதியுடைய முற்பணத்தொகை 2017 யூலை 31 வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் சேவையிலிருந்து விலகிச் சென்ற 12 உத்தியோகத்தர்களின் நிலுவை இடர் கடன் மீதிகள், உடன்படிக்கை மீறியமையால் அறவிடப்பட வேண்டிய மீதிகள், கையளிக்கப்படாத புத்தகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய மீதிகள் மற்றும் முன் அறிவித்தலின்றி சேவையிலிருந்து விலகிச் செல்லல் போன்ற விடயங்களின் காரணமாக நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையான ரூபா 1,615,795 தொகையினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 21(க) பிரிவு | உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கிடைக்கும் மானியங்கள் மற்றும் நிறுவனத்தினால் உழைக்கப்படும் ஏதேனுமொரு வருமானத்தினை செலவு வைக்க வேண்டிய நிதியமொன்றினை பேணுவதற்காக உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்கு அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 03 ஆந் திகதிய எஸ்எல்ஐஏரீஈ/சீரீ/2016 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் உழைக்கப்படும் திகதியில் தலைமை அலுவலகத்தின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டுமென உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தி | வழங்கிய கடன் தொகையை மீள அறவிடல் கடன் வழங்கிய மாதம் முடிவடைவதுடன் தொடர்ந்து வரும் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடர் கடன் தொகையினை மீள அறவிடல் 2 மாதங்கள் முதல் 3 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | கேகாலை, கண்டி, பதுளை மற்றும் மட்டக்குளிய போன்ற உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேடுகள் பேணிச் செல்லப்ப்ட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை | (i) ஆராய்ச்சி முன்மொழிவுகள் ஆராய்ச்சி குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிராத போதிலும், உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைகளுக்கமைய ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டிருந்தன.<br><br>(ii) சுற்றறிக்கையின் பிரகாரம், ஆராய்ச்சி முன்மாழிவு மறுக்கப்பட்டிருந்த போதிலும், பதுள்ளை, யாழ்ப்பாணம் மற்றும் தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சிப் படிகள் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 81,198,532 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 16,516,167 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 64,682,365 ஆன அதிகரிப்பொன்றை காட்டியது. மீண்டெழும் செலவினங்களுக்கான அரச மானியம் ரூபா 93,400,000 இனால் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 51,697,449 இனால் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும், கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும் பற்றாக்குறையொன்றினைக் காணக்கூடியதாக இருந்த போதிலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீள சீராக்கியமையின் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 245,179,260 ஆக இருந்த பங்களிப்பானது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 988,934,215 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நிறுவகத்திற்கு இணைத்துக்கொள்ளத் திட்டமிட்ட மாணவர்களின் எண்ணிக்கை, கடந்த 03 வருடங்களின் உள்ளபடியாக இணைத்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|
| இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 6696 | 7000 | 7200 | 7400 |
| உள்ளபடியாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 5172 | 6696 | 6942 | 8008 |
| வேறுபாடு | 1524 | 304 | 258 | 608 |
| வேறுபாடு சதவீதமான | 23 | 4 | 3.5 | 8 |

2016 ஆம் ஆண்டின் போது இணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்ட எண்ணிக்கையை விட உள்ளபடியாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 608 இனால் அல்லது 8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் எந்தவொரு வெளிநாட்டு மாணவரும் நிறுவகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் மற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா பதிவியணிக்காக இலத்திரனியல் வாசிகசாலையொன்றினை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மஹாபொல புலைமைப்பரிசில் கிடைக்காத மாணவர்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் கல்விசார் நடவடிக்கைகளுக்காக நிதி உதவிகளை வழங்குவதற்காக நிறுவன மட்டத்தில் நிதியமொன்றினை தாபிப்பதற்கு 2015-2017 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) விரிவுரைகளை நடாத்துதல்

(i) கேகாலை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் நடாத்தப்படும் உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமாவுக்குரிய பாடங்களுடன் தொடர்புடைய எந்தவொரு விரிவுரையாளரும் மீளாய்வாண்டின் விரிவுரைகளை நடாத்துவதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டிராததுடன், வெளிவாரி விரிவுரையாளர்களால் பாடநெறிக்குரிய பாடங்களின் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) கேகாலை மற்றும் கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நடாத்தப்படும் ஒவ்வொரு பாடநெறிகளுடன் தொடர்புடைய பாடங்களுக்குரிய விரிவுரையாளர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய மணித்தியாலங்கள் மற்றும் உள்ளபடியாக பூர்த்தி செய்த மணித்தியாலங்களுக்கிடையே முறையே 3 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) பதுள்ளை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடாத்திச் செல்லப்படும் வாசிகசாலையில் 1997 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் தொலைந்து போயுள்ள ரூபா 35,583 பெறுமதியான 226 புத்தகங்களும், 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையிலும் மாணவர்களால் எடுத்துச் செல்லப்பட்டு மீள கையளிக்கப்படாத ரூபா 33,305 பெறுமதியான 156 புத்தகங்களும், 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையிலும் வெளிவாரி விரிவுரையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டு மீளக் கையளிக்கப்படாத ரூபா 4,102 பெறுமதியான 20 புத்தகங்கள் தொடர்பிலும் முகாமைத்துவத்தினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்குரிய பரீட்சை நேர அட்டவணை பல தடைவைகள் திருத்தப்பட்டமையால், இறுதியாக திருத்தப்பட்ட கால அட்டவணைக்கமைய பரீட்சைகள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள போதும், ஒரு பாடத்திற்காக பதுளை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இரு மாணவர்களுக்காக மீண்டும் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் பல்வேறு பாடநெறிகளுக்குரிய ஒவ்வொரு பாடங்களுக்காக ஒரே வினாத்தாளுக்கு அனைத்து மாணவர்களும் ஒரே தடவை பதிலளிக்க வேண்டிய போதிலும், இவ்வாறு வேறுவேறாக வினாக்களுக்கு பதிலளித்தமையால் பரீட்சை நடவடிக்கைகள் முறையாக முகாமை செய்யப்பட்டதா என்பது பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(ஈ) நிறுவகத்திற்கு சொந்தமான லபுதுவ, அம்பாறை, அனுராதபுரம், மட்டக்களப்பு, நயிவல, வவுனியா, குருநாகலை, மற்றும் நாவலப்பிட்டி ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிறுவன பிரிவு அமைந்துள்ள காணிகளை கைப்பற்றுவதற்கு 2017 யூன் மாதத்தின் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) மஹாபொல புலமைப்பரிசில் வழங்குதல்**

---

மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில் வழங்கும் போது புதிய கல்வியாண்டிற்காக 1500 மாணவர்கள் அல்லது இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களில் ஐந்து சதவீதம் ஆகிய இரண்டில் குறைந்த எண்ணிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறுவகத்தினால் புலமைப்பரிசிலுக்கு தகுதி பெறும் மாணவர்களைத் தெரிவு செய்து, மஹாபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்புவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவீடுகளில் காணப்படும் நலிவுகள் மற்றும் குறைபாடுகள் காரணமாக புலமைப்பரிசிலுக்கு தகுதி பெறுவதற்கு உரித்தினைப் பெறும் மாணவர்களின் கவனத்தில் கொள்ளக்கூடிய எண்ணிக்கைக்கு புலமைப்பரிசில் கிடைத்திருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மட்டக்குளி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மஹாபொல புவமைப்பரிசில் வழங்குதல் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013/2014 கல்வியாண்டிற்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்காக மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் கீழ் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்காக மாணவர்களை தெரிவு செய்வதற்கு தேவைகள் சுட்டியினை (Need Index) உபயோகப்படுத்தி, இந்த சுட்டிக்கு தரவுகளை உட்புகுத்தும் போது புவமைப்பரிசிலுக்கு தகைமையினை பெறாத உயர்ந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்களுக்கு மஹாபொல நிதியத்திலிருந்து வழங்கப்படும் புலமைப்பரிசில் கிடைப்பதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் கிடைக்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதாக அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) மஹாபொல புலமைப்பரிசிலுக்காக தகைமையினை பெறும் மாணவர்களை தெரிவு செய்யும் போது மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதாந்த வருமான அளவிற்குப் பதிலாக, அந்த அளவிற்கு எந்தவிதமான தொடர்புமற்ற ஏனைய வருமானங்களின் அளவு உள்ளடக்கப்பட்டு தேவைகள் சுட்டி காண்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) தேவைகள் சுட்டிக்காக கருத்தில் கொள்ளப்படும் வருமானங்களை தீர்மானிக்கும் போது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரதும் மாதாந்த வருமானங்களின் கூட்டுத்தொகை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய போதிலும், சில சந்தர்ப்பங்களில் தாயின் வருமானம் மாத்திரம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் தந்தையின் வருமானமும் மாத்திரமும், அவ்வாறில்லையெனில், இருவரதும் வருமானத்தின் அளவில் குறைந்த அல்லது ஆகக்கூடிய வருமானம் ஆகிய இரண்டில் ஒன்று கணிப்பீட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) 2015 ஆம் கல்வியாண்டிற்கான மஹாபொல புலமைப்பரிசில் பெறுனர்களை தெரிவு செய்வதற்குரிய விண்ணப்ப படிவங்களை பரிசோதித்தல், தேவைகள் சுட்டியினை கணிப்பிடல் மற்றும் அத்தகைய தொடர்புடைய நிர்வாக பணிகள் ஒரு உத்தியோகத்தரின் தலையீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த பணிகளை உயர் தொழில்நுட்ப நிறுவன மட்டத்தில் அல்லது தலைமை அலுவலகத்தினால் மதிப்பீட்டுக்கு உள்ளாகும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடு நடைமுறையொன்று தாபிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(v) உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் தமது கல்வியாண்டிற்காக இணைத்துக் கொள்ளல் மாணவர்களின் கல்வியாண்டின் ஆரம்பத்தில் சனவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதியினுள் இடம்பெற்ற போதிலும், மஹாபொல புலமைப்பரிசிலுக்காக புலமைப்பரிசில் பெறுநர்களை தெரிவு செய்து புலமைப்பரிசில் வழங்குதல் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடக்கும் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(vi) 2013 மற்றும் 2014 ஆம் கல்வியாண்டிற்காக கல்விசார் பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு முதலாவது புலமைப்பரிசில் தவணைப் பணத்தினை வழங்குதல், இரண்டு வருடங்களைக் கொண்ட கற்கை நெறிக் காலம் முடிவடையும் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**4.3 நிதியங்களின் குறைப் பயன்பாடு**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக நிறுவனத்திற்கு ரூபா 978 மில்லியன் மூலதன மானியம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 545 மில்லியன் பணமாக கிடைத்திருந்தது. இந்த பணத்தில் ரூபா 395 மில்லியன் அல்லது 72 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 150 மில்லியன் அல்லது 28 சதவீதம் மாத்திரம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டினுள் நிறுவனத்தினால் எதுவித பணமும் முதலீடு செய்யப்பட்டிராததுடன், 2016 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், தலைமை அலுவலகத்தின் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குரிய 12 வங்கிக் கிளைகளில் நிலவிய நடைமுறைக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 518,491,883 ஆகும்.

## 5 கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்திக்கமைய கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் குறித்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கமைய, வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக நடைமுறையிலுள்ள காலச்சட்டகம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.3 பெறுகைகள் திட்டம்

2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 12 இன் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றுக்கிடையே 15 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.5 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2017 யூலை மாதத்தின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கீட்டு பொதியின் நலிவுகள் இனங்காணப்பட்டு அவை சீர்செய்யப்படாமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடானது திட்டவட்டமான எதிர்வுகூறலின்றி தயாரிக்கப்பட்டிருந்தமை |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | கிரயத்தை இனங்காணக்கூடிய முறையில் பதிவேடுகள் பேணப்பட்டிராமை |
| (ஈ) | வாசிகசாலை நடவடிக்கைகளின் கட்டுப்பாடு | (i) வாசிகசாலை புத்தகங்களை வழங்குதல் மற்றும் மீளப்பெறல் தொடர்பில் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிராமை |
| | | (ii) தொலைந்து போன மற்றும் கையளிக்கப்படாத புத்தகங்கள் தொடர்பில் காலதாமதமின்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | மஹாபொல புலமைப்பரிசில் நிதியக் கட்டுப்பாடு | புலமைப்பரிசில் வழங்குவதற்காக மாணவர்களை தெரிவு செய்யும் போது நிலவும் குறைபாடுகளை குறைத்தல் மற்றும் கொடுப்பனவில் ஏற்படும் தாமதங்களை குறைத்து உரித்தினை பெறும் கூடுதலான மாணவர்களுக்கு நிதியத்தின் நலன்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஊ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | பாடநெறிகளுக்கான விரிவுரையாளர்களின் விரிவுரைக் காலத்தினை உச்ச அளவில் பெற்றக்கொள்ளல் மற்றும் விடயத்துடன் தொடர்புடைய விரிவுரையாளர்களை விரிவரைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் பாடநெறிகளின் தரத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |